செ.வெ.எண்: 453 நாள்: 03.09.2019

# பத்திரிக்கைச் செய்தி

திருநெல்வேலி கோட்டத்தைச் சார்ந்த விவசாய பெருங்குடி மக்களுக்கு திருநெல்வேலி உதவி ஆட்சியர் அவர்கள் தெரிவிக்கும் செய்தி: -

திருநெல்வேலி கோட்டத்தில் உள்ள திருநெல்வேலி, பாளையங்கோட்டை, சங்கரன்கோவில், திருவேங்கடம் மற்றும் மானூர் வட்டங்களைச் சார்ந்த விவசாய பெருங்குடி மக்களுக்கு கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் திருநெல்வேலி உதவி ஆட்சியர் அவர்கள் தலைமையில் 13.09.2019 வெள்ளிகிழமை அன்று முற்பகல் 10.00 மணியளவில் திருநெல்வேலி ,உதவி ஆட்சியர் அலுவலகத்தில் வைத்து நடைபெற உள்ளது. மேற்படி கூட்டத்தில் திருநெல்வேலி, பாளையங்கோட்டை, சங்கரன்கோவில், திருவேங்கடம் மற்றும் மானூர் வட்டங்களைச் சார்ந்த விவசாயிகள் கலந்துகொண்டு தங்களது கோரிக்கை மனுக்களை அளித்து பயன்பெற்றுக்கொள்ளலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,திருநெல்வேலி